இலகியவன்னிநீயேயாவுமாயியைந்ததேவர்
குலவுருவாகிவேள்வியவியினைகொண்டுநல்கி
யலகிலசங்கறபசித்தியடைதிநின்னுவிதோய்ந்தா
ருலகினியுரைத்தயாவுமுற்றுமேலுலகஞ்சேர்வார். (௧௪)

சித்திரைச்செறிவெண்பக்கந்திகழ்ந்தசத்தமிநாணின்பே
ரத்திரைக்கடலினுருமங்கிதீர்த்தத்துமாக்கு
நத்திரைதநெழுநின்றீர்த்தமதனினுநயந்தியோக
முத்திரையுடையாபோலமூழ்கினர்முழுதுமேவி. (௧௫)

திருமலிநதினையமார்ந்துநிகழ்ந்தசங்கற்பசித்தி
யொருமையினடைந்துநமபேரருளினுலுயர்வாரென்னுப்
பெருவரமளித்துத்தூயவிலிங்கமாயபிறங்கப்போற்றித்
தருகிழலவரைவாழவித்தனலவன்றழைத்தானுறுவும். (௧௬)

எழுந்திரையங்கியாற்றுயிலஞ்சியிற்படிந்துசோதிக்
கொழுந்துபருருவமாயகுறுமுனிலிங்கம்போற்றித்
தொழுந்தவமுடையார்வேண்டுந்திருவெலாந்துணிவின்மேவி
யழுந்துவெம்பிறவிநீங்கியமலமாயமர்வரம்மா. (௧௭)

அளக்கரினங்கிதீர்த்தமாவியாமங்கிதீர்த்தந்
துளக்கறப்படிந்தூயகுறுமுனிதொழுதுபோற்றும்
விளக்கமாரிலிங்கம்போற்றுமேன்மையார்மேனமையாரே
இளக்குவாரமரர்போற்றகேடில்வீடடைவரன்றே. (௧௮)

குறுமுனிலிங்கமாயகொழுஞ்சுடருருவங்கண்டார்
பெறுகுவரினபவீடேபிறங்கியபோகமவேண்டி
னறுமலர்த்தருவின்ழுளமுகனிருக்கையாதி
மறுவறுபதங்கள்ன்னேர்வரவெதிர்கொள்ளுமன்றே. (௧௯

அனலவன்றீர்த்தமூழ்கியகத்தியவீசற்கேபாற்
புனன்மலிபழனப்பேரூர்புனிதவான்பொருவில்சாந்த
பினுமணிப்பூண்பட்டாடைவிரைமலர்மாலையீந்தோர்
முனமலிகோபுராதிதிருப்பணிமுறையிற்செய்தோர். (௨௦)

சேயிதழ்க்கமலம்போலுஞ்சேவடிபணிந்தார்யாரும்
பாய்திரைப்புடவிமுற்றும்பரித்துப்பினபரிந்தபோக
மேயிருஞ்சுவர்க்கமேவிவேண்டியவின்பமார்ந்து
தாயினுமினியான்செய்யசரணிழற்றங்கிவாழ்வார். (௨௧)

அத்திரியிதனின்மூழ்கியந்திவண்ணனையும்போற்றிப்
பத்தியிற்பணிந்துமூவர்தமைப்பெறும்பததிறசேர்ந்தான்
சித்திகண்ணுவனேயாதிமுனிவரர்சேர்ந்தாரீது
முத்திநல்வழியாமாடிமுனிதொழுமுதலைப்போற்றின். (௨௨)

செங்கனன்மீண்டும்வேதவனத்திடைச்சேர்ந்துதெண்ணீர்ப்
பங்கயவாவியாற்றிப்படர்ந்தமைபகர்ந்தேமபாரிற
சங்கரனுருவமாயமறைவனத்தன்மையோர்ந்தாய்
மங்கலமாகியோங்கிவாழ்கெனவகுத்துச்சொல்வான். (௨௩)

அணிவளநிறைந்துபாரோர்க்கமுதமாயமலமாகிப்
பணிபவர்க்காக்கநல்கிப்பரம்பரறகிதயமாகிப்
பிணியுறுமபிறப்புநீக்கும்பெருமறைவனத்துமேன்மை
அணிவனவுரைத்தேமுற்றும்யாவரேசொல்லவல்லார். (௨௪)

வரன்முறை, யிலிங்கர், தோற்றம், ○ வனப்பதி, நாம, மேன்மை,
யரன்மனு, வன்னி, யாறியாததிரை, மணத்திஞககம்,
பரவிடஙகேசன், * றென்பாற்பசுபதி, யடைந்தோர்பான்மை,
விரவியதீர்த்த, மேன்மை,விளக்கினம்விதியிற்றநதே. (௨௫)

மறைவனப்புகழ்படிப்பவர்கேட்பவர்வல்வினைத்திரணீக்கிக்
குறையகற்றியேதிருக்கவின்காதலர்கோற்றொடிகுணமாயு
ணிறைதரப்பொலிநதளவிலின்பார்ந்தணிநிலத்திடைப்புகழ்மேவி
யிறையெனப்பொலிந்திமையவர்போற்றிடவிலங்குவரெழில்வாய்ந்தே. ()

என்றுமோரையொன்றலதொருதலத்திடையேய்ந்திடாவெனக்கீச
னென்றுபேரருளுதவலாலித்துணையுன்னுழையுயர்ந்தோங்கித்
துன்றுசீர்மறைவனக்கதையோதினேன்றுகளறுங்கதிபெற்றே
னன்றுமேவியகேள்வியானீயுமுய்ந்திருமையுநனுகுற்றாய். (௨௭)

---

* தென்பாற்பசுபதி இராமநாதசுவாமி. அடைந்தோர் சாலிகோத்திர முனிவர் முதல் அக்கினிதேவன் ஈறாயினார். இறுதிக்கண்மேன்மை-குளகேசர் மேன்மைமுதலிய ஒழிந்தமேன்மை. விதி முதனூல் விதியும்,இலக்கண விதியும், இன்னோரன்ன பிறவிதியும். வனப்பதி வேதவனப்பதி.

செல்வன்றனினியென்றிடநாரதன்சேவடித்தலம்போற்றி
யெல்லையீருமன்பிருங்கதிகாதையாலீந்தனையென்னையாள்வான்
மல்லனமாதவமறகிலேனெனதொழுமன்னனைவிடைகொண்டே
யொல்லைவானகதநுற்றனனாரதனுயர்மறைமுனிவீர்காள். (௨௮)

வேறு.

வாகைநெடுங்கதிர்வேன்மாந்தாதாநாரதனுமறையோன்மைந்த
னோகையினினவினவவனுயருமறைவனமேன்மையுரைத்தவாறே
யீகைபெறநைமிசத்திருமகருரைத்தேனிதநேர்வாரெவித்துச்சொல்வார்
பாகைநிகர்பணிமொழியாள்பாகனடிமலர்நிழறழீழ்ப்பதிவாரென்றும். (௨௯)

என்னவுயர்தவச்சூதனிசைத்திடநைமிசத்தவத்தோரெழுந்துமேலோன்
பொன்னடித்தாமரைபோற்றிப்பூசைபுரிந்தருந்தவதோயபொருவில்காதை
பன்னரியகதியெளிதேபயப்பவருளினைநோனமின் பயனும்பெறறேம்
முன்னவனுமருள்புரிந்தானினிக்குறையுமொன்றுமிலேமுனிவவென்றே. ( )

வேறு.

நாரதன்முழுவதுநவையறவுணர்தருநலமேவுங்
காரணமெதுவவனியல்வரனமுறையொடுகரைவாயென்
றூரணமுணாதருமறவர்கள்வினவிடவுறிவாரும்
பூரணநிலைபுணர்புகழ்முனிகனிவொடுபுகலினன்றன். (௩௧)

அக்கினிபுட்கரணிசசருக்க முற்றிற்று.

ஆ_ திருவிருத்தம் ௩,௧௧௨.

நாரதச்சருக்கம்.

உள்ளத்தீமையொழித்தின்புதவலாற
பள்ளத்தார்புனல்போலப்படருமா
லள்ளறபோதவிழ்த்தாகியதேனபொழி
வெள்ளத்தார்மறைக்கானத்துமேன்மையே. (௧)

முற்றுமாய்ந்துமுதுக்குறைமேவியே
யெற்றிழுப்பகையின்பச்சுடரதாய்ப்
பற்றுஞானப்பரவையிந்காரதன
பெற்றவாறென்பிறங்கியகேள்வியாய். (௨)

வேதமேயுருவாயவியாதனூற்
போதமேவியபுண்ணியமூர்த்தியே
யேதமினறிவினவியயாவையு
மோதினனருள்வேந்தனுவப்பவே. (௩)

என்றுரைமிசைமேயவிருந்தவ
ரொன்றுகாதலிற்கேட்பவுவப்புற
நன்றுநீருரைசெய்தநாரதன்
* றன்றுமாறுதணிந்திரெனக்கூறுவான். (௪)

பொதியமேயபொரியரைச்சந்தன
மூதியமென்பணைமூசவுரிஞ்சியே
மதியசீதமணியெனவார்ததுமென
புதியபோதிற்பொருணைபொலிந்ததால். (௫)

மலையினுள்ளவளங்கவர்ந்தார்கலி
நிலையினூடுநிமிர்ந்துகலங்கொளா
வலையினமுத்தமணிதருமாசெயா
விலையினமேயவணிசரினமிக்கதே. (௬)

தருமமேயுருவாயதழங்குநீர்ப்
பொருனைமேயதென்னாடுபொலிந்துளார்
பெருமையாளர்பிறங்கியவேதநூ
லொருமையார்நெறிமுற்றுமுணர்ந்துறுவார். (௭)

கண்ணுதற்பெருமான்பொழுதுகண்டிகை
மண்ணுவாருடனமுற்றுமலிந்துளா
ரெண்ணுவாரஞ்செழுத்திறையீரடி
பண்ணுவாரனகோயிற்பணிகளே. (௮)

அன்னவேதியருள்ளமர்ந்தவர்
சொன்னவேவல்புரிந்தழல்சூழச்சியா
லின்னனமேவிய † தாசியிவள்குல
முன்னமேயினனோடுமுயங்கியே. (௯)

ஈன்றமைந்தனிரங்கியிணைமுலை
கான்றபாலயினதுள்ளங்களிப்புற
நான்றதொட்டினிவளர்ந்திமமுறை
தோன்றலைந்துவருடந்தொடங்குநாள். (௧௦)

பற்றுமுற்றவும்பாற்றிப்பசைதடிந்
திற்றதாம்பரமெனவுணர்ந்தினை
முற்றுமப்பரமேயெனமுன்னுவா
மற்றுமெய்தனமருவொளிவாரியே. (௧௧)

---

* தோன்றுமாறு-பிறந்த பிரகாரம். † தாசி-அடிமைவேலைக்காரி.

திங்கணூன்றும் * வருடஞ்செறிதலாற்
றங்கவோரிடமோர்ந்துநவமறைத்
துங்கவேதியர்தம்பதிதன்னினு
ரெங்கணுதற்கினியயதிகளே. (கஉ)

நீத்தமாதவர்சாரநெகிழ்ந்துளம்
பூத்தவேதியர்போகம்பொறிப்புகர்
காததமேன்மைக்கடவுளரிங்குற
யாத்தபுண்ணியம்யாவதென்றண்மினூர். (கங)

இனியநன்மொழிகூறியிரும்பதி
புனிதமாகப்பொருநதுதலவேண்டுமென்
† றனிகமாகவிரப்பவமாந்தனர்
முனிவராகியமூதறிவோர்களே. (கச)

ஆங்கவர்க்குப்பணிசெயவாதியி
னோங்குநல்வினையுற்றனனுதலாற
பாங்குதாசிமகவைப்பணித்தலுந
தீங்கிலானதுசெய்குவதாயினன. (கரு)

இளையராடன்மறந்தவர்க்கீரடி
விளையவின்பமவருடிவிழுததவர்
களையுமாடைகழீஇப்புறங்காவல்செய்
தளையுமா ‡ திவனைப்பணியுய்த்தலும். (கசு)

* பாலனன்பணிகண்டுபரிந்தவர்
சாலுமாதரவாறறருமெச்சிலை
வாலிதென்னவருந்திடவல்வினை
யோலமெனதிரிநதோடியொளித்ததே. (கஎ)

வேறு.

மறைத்தவெவ்வினைமாய்தலுமுளமொளிவாய்ந்தே
யுறைத்தவன்பினோடுறைந்தவர்சிவகதையோதி
நிறைப்பவஞ்செவிநிறைதலுநெகிழ்நதுநேர்கூற்றங்
குறைத்தசேவடிக்காதரவெழுந்ததுகூர்த்தே. (கஅ)

* வருடம்-மழை. † அனிகம்-கூட்டம். ‡ இவனைய்-இவனொருவனைய.

எழுந்தவாதரவேவனுமுணர்ந்தவரிமயக்
கொழுந்திறேடமர்குருமணிமந்திரங்கூறி
யழுந்தியாவருமறிவதற்கரிய * மெய்ஞ்ஞானத்
தழுந்தவாதனையெனவருள்செய்தனர்சார்ந்தார். (௧௯)

ஞானமாதவரேகலுநானிலனாகி
லூனமுற்றிடுமிவனெனவனையோடுறைந்தா
ணைகாலையினாங்கவனொறுவிடையானபா
ருனளிததிடவேகினனிரவிடைத்தனிததே. (௨௦)

கடுவொடுங்கியவாளெயிற்றுடராக்கெளவ
நடுநடுங்கிப்போயிறததலுமவனதுநாடிச்
சுடுமிடம்படுகாட்டிடையிந்தனச்சூழற்
கடுகுவெங்கனறகிரையதாக்கினனெருகணத்தில். (௨௧)

பாசவேரறப்பாற்றினனசிவனெனும்பரிவாற
றேசமேறபடர்நதரும்பதிதீர்த்தஙகளசிவணி
நேசமாாதரநிமலனபலபுகழ்நினைந்தே
வாசமேவினனபதிககாமண்டலமருஙகே. (௨௨)

திருப்பொலிந்துயர்தேசமேற்றிரிபவனொருநா
ளுருப்புவெஙகதிர்க்கோடையிற † கடததிடையுற்று
விருபபுமாய்நதறவெம்பியே ‡ வெடிபடுவிடபத
தருப்பயின்றகான்மேவினனவெயிலுறத்தளாநதே. (௨௩)

பொறிவரிப்புலிபுழைக்கைமாப்புலவுவாயாளி
நெறிமயக்கியகுடாவடிநிணங்கவர்செந்நாய்
செறிமயிர்க்கருங்கோலமேமுதலியதிரண்டங்
கறிவழித்திடுமரியரவொடுங்கியததுவே. (௨௪)

அடைந்தவெவ்வனக்கானியாற்றடைகரையமர்ந்து
குடைநதருந்தியேகுளிர்புனலினைப்பறக்குலவி
யிடைந்ததணணிழலமேவினன்வெவ்வினையாவு
முடைந்துகும்படிதுறவர்தாணினைநதனனுளத்தே. (௨௫)

---

* மெய்ஞ்ஞானம் உனைத் தவாது தழுவுமென முடிக்க. செய்யுமென்னும் வாய்பாட்டுத தழுவு மென்முற்று ஈற்றுயிர்மெயகெட்டுத் தழுமென நின்றது. † கடம்-அருநெறி. வெடி-அச்சம். ‡ விடபம்-கொம்பர்.

உணர்வினுக்கருமைரத்தவப்பரஞ்சுடர்ஞானம்
புணருமாதரம்புந்தியிற்புணரவுமபுணரான்
* றுணரினூறற்றூய்மையின்மீளவுஞ்சூழ்ந்து
மணரியோர்க்கிலையன்முறையின்னணமாய்த்தான். (௨௬)

திருந்துமாவிஜயச்சிற்பரமதனையோதெரியான்
வருந்தியேவிழூஉமல்குகண்ணீர்விழமெளனம்
பொருந்திமேவலுமோரொலிவானிடைப்பொலிந்து
மருந்துபோலுறமற்றதுகேட்டனனமகிழ்வால. (௨௭)

தாழ்ந்தவெவ்விணைதந்தவிப்பிறப்பினிற்றளர்ந்து
சூழ்ந்துமேவலைஞானத்தைததுயருமிக்காயம்
வீழ்ந்தவநிலைவிமலமாய்வேற்றுடன்மருவி
வாழ்ந்துபோதியெனவுரைத்துடன்மறைந்ததவ்வாக்கே. (௨௮)

விழைபொருட்பயன்மேவினர்போன்மனம்விழைந்தும
பிழையுடறபொறைபிரிவதென்றெனப்பெரிதுயிர்த்துத்
தழையு‡யிச்சையைததடிநதுலகெங்கணுஞ்சரிததே
யிழையுடைகொடிபாகனைநினைநதுடலிழநதான. (௨௯)

மெய்யகன்றுடன்விரிஞ்சனதுயர்மகவாகிச்
செய்யசெஞ்சடை†செமபொனூலுரமபெறச்‡சீரை
தையசீருடைதண்டொடுகமண்டலநதனிமா
னையதோனமருவாருருவனபினனுகி. (௩௰)

உதித்து§நாரதனெனும்பெயர்புனைந்துயர்ஞான
மதிததுமாதவமலரவனறனைக்குறிததாறற
விதித்தவேதியனமெனசிறையஞசமேனமேவித்
துதித்தமைந்தனைத்துணிவரஞ்சொல்லெனசசொல்வான். (௩௧)

இருளைவேரிரிந்திடர்ப்பிறப்பெனும்பெயரிடும்பை
யுருளைவெமபொடியாக்கியவுலப்பிலாநநதத
தெருளைநல்கெனமறைவனனுசேர்நதறஞ்செய்யி
னருளுமீசனப்பதியதிசயமுநீயறிவாய். (௩௨)

---

* அடிககடி நீரிலேல பாதபிரக்ஷாளனஞ்செயதுகொணடு மீளவுந் தியானித்தடைந்துந் தெளிநதிலன. துனை-பூ.ஆ௰.தாகுபெயராயப்பாததை யுணர்ததினினறது. † இச்சை ஈண்டாகாமியம். ‡ செமபொனூல-சுவர்ணோபவீதம். மரவுரியைப் பொருத்திதனைதத அழகியவுடை. § நாரதன்-ஞானத்தைக்கொடுட்டவன். நாரம-ஞானம். தன-கொடுபபவன.

கடிதினைகெனக்கமழ்ந்தொளிகான்றருந்துறக்கம்
படியினுமெனப்பல்வளங்கனிந்தபின்மறையு
கொடியுநூல்களுநுணங்கியகேள்வியுமகமுங்
குடிபுகுந்தணிகுலவியமறைவனங்குறுகி. (௩௩)

போதவிழ்த்தளிபுதுமதுவயின்மணிகன்னி
வேததீர்த்தமுங்கோடியுந்திருமறைபடிந்து
காதலாறபிரதக்கிணங்கவின்பெறவாறறி
நாதனீரடிநளினமேற்பணிந்தனனயநதே. (௩௪)

புந்தியாய்ப்பொறிநெறிப்புலபபொருளெலாம்புணர்ந்தும்
பந்தியாதுயர்கரியெனபபடும்பொருளவிளக்க
முந்தியாயெனவுலகளிததொளிாதருமுருவா
லந்தியாயருணமலனேயாதியேயரசே. (௩௫)

போற்றியென்றடிபோற்றிடப்புராதனன்றோன்றிச்
சாற்றிநீவரஞ்சார்கெனததயங்குமெய்ஞ்ஞானப்
பேற்றினினலம்பெறுவலயானெனததொறுப்பெருகு
மூற்றினியமேயுதவியவுணர்வினையளித்தான. (௩௬)

குறிகுணங்கடந்தமலமாய்க்குளிருமானந்தஞ்
செறிதருங்கனசிறபிரகாசமாய்த*நிமான
மறியவில்லுமிழ்ந்தணவரிதாய்மதியாதி
யறிவதறகரிதாயுலகாதரமாகி. (௩௭)

வேறு.

ஏகமாயவத்தைக்காலத்தெல்லையற்றினதென்றோராப்
போகமாய்த்தானின்றாயிறசராசரமபொக்கமாகு
மூகமாய்விளங்குஞானத்தொளியினைநல்கவோகை
வேகமாயுடல்களாதிவிரகறவிளங்கினனே. (௩௮)

இனையரெண்ணிலாரிப்பதியிலங்குமெய்ஞ்ஞானந்
தனைவின்மேவினர்சுருதியங்கானகச்சோதி
வினையவிச்சையும்வீட்டுதற்கருட்கொடிவேய்ந்தான்
முனைவராகியமுனிவிர்நீர்மூந்துமின்முயனறே. (௩௯)

எளிதின்முத்தியையெய்துதற்குபாயமொன்றிசைக்கேன்
விளியுமாதவவேட்கையைவிடுத்தலர்மேய்ந்தே
யளிகள்சூழ்மறைவனமடைந்தமலமாயின்பக்
களியின்மூழ்குமின்கதியினைக்கண்ணுறக்கண்டே. (௪0)

---

*நிமான்மறிய-கொடியமானெனுமகங்காரங்கெட.

கருப்பவெஞ்சிறைக்கடுந்துயர்னோய்க்கடற்கருக்கி
யுருப்புவெண்ணிரயத்துறுமருட்பிறப்புற்று
செருப்புறும்புழுவெனத்துடித்தயருதனீங்க
விருப்பமேவிநீர்மறைவனமேவுதிர்விரைந்தே. (௬௧)

பலவுமாய்ந்ததிற்சாரமாயுண்மையாய்ப்பரமா
யிலகுபாயமீதுணர்ந்தனன்மறைவனத்தேய்ந்தே
யுலகமாயைநீரொழித்தருளானந்தவுருவா
யலகுதீர்பிறப்பகற்றுவீர்நைமிசத்தறவீர். (௬௨)

எண்ணில்*வாரமேயியம்பினுமிலகுமெய்ஞ்ஞானக்
கண்ணிலார்பவக்காதலார்மெய்யெனக்கருதா
ரண்ணலாரருளுடையரேயாக்கமெனறறிவார்
வண்ணமார்மறைவனமெவர்க்கெய்திடும்வரதநீர். (௬௩)

வேறு

சூதனிவ்வாறுகூறநைமிசத்துறவோர்யாருங்
காதலானமறைசைமேவிக்கருணையேயுருவமாகும்
வேதநாயகனைப்போற்றவிடையருளெனச்சூத
னுதரவோடியானுமடைவனென்றனையரோடும். (௬௪)

பொருக்கெனவெழுந்துவேதவனத்திடைப்புகுந்துபூமேற்
றிருக்கிளர்ந்தணிகள்வாரந்துசெறிவனநிறைந்துதேசார்ந்
தருக்கனுமுட்குஞ்சோதியரமியவீதியாம்பன்
முருக்கிதழ்ச்செய்யவாயார்†முல்லையுமுதலோர்சால்பும். (௬௫)

மகத்துறைவழக்கும்வேதவொழுக்கமுமாதுபாக
னகத்தவருருகும்பூசையார்வமுமமலவாழ்வுஞ்
சகத்துயர்சிறப்புநோக்கித்தருமத்தினுருவமாகி
மிகத்திகழ்பதியைப்போறறியாத்திரையாறுமேவி. (௬௬)

வேண்டினர்க்கமுதமாயவேதநாயகனைப்போற்றித்
தூண்டியசுடரினுள்ளஞ்சோதியாய்த்துகளிற்றீர்ந்தே
யீண்டியமகிழ்ச்சியோடுமின்பமாயிலங்குமேன்மை
பூண்டியல்பதியின்மேவிப்புனிதராய்ப்பொலிந்தாரென்றும். (௬௭)

கதிதருங்காதையீதுகற்பவர்கேட்போர்காதன்
மதிதரவிரித்துச்சொல்வோர்வல்வினைவீட்டிவானோர்
துதிதருஞ்செல்வமாயுள்சுந்தரமடவார்மைந்தர்
பதியுறவாழ்வுமேவிப்பரன்பதநீழல்சார்வார். (௬௯)

---

* வாரம்-தடவை என்பது மேலுங்காட்டிடும். † முல்லை-கற்பு.

வேறு.

செந்தமிழ்மறைவனப்புராணஞ்சீர்பெறத்
சந்தவின்புத்தொடைதழைத்ததாதவான்
முந்துநான்முதக்குறைமுற்றநல்கியே
பந்தமீர்க்கின்னருள்பயக்கும்பன்னினே. (௪௯)

வேறு.

மழலையின்சொலார்மைந்தருமதுகரம்படிந்த
குழலினார்களுங்குறையறுஞ்செல்வமுங்கொடையும்
பழனவூர்களும்படைத்துவாழ்ந்தரவொடும்பகைதீர்
குழவிமாமதியணிந்தவனடிநிழற்குவிவார். (௫௰)

வேறு.

வாழியணிவேதவனம்வாழிமறைவனநாதன்மறையோர்வாழி
வாழிபலவுலகேதுமரனசீர்த்திநீறுறொளியும்வயங்கிவாழி
வாழிசிவனதிருப்பூசைசமயநெறிமாதவருமல்கிவாழி
வாழிமழைவளஞ்சுரந்துமாநிலமாமனுநீதிவாழிவாழி. (௫௧)

நாரதசருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௫,௨௪௯.

வேதாரணியபுராண முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

அகோரதேவர் திருவடி வாழ்க.

சருக்கமொன்றுதற்பயின்றவர்சனனவித்தனவிற்
கருக்குமெனறிதுகழுறலிறகரலிதைச்சொற்
றிருக்கருட்கொடுதிருத்துமென்சிறியதீப்பவமு
முருக்குமெனறியாழமொழிபரிறபவிதுமுடித்தேன்.

மூர்த்தபேதங்கள் வருமாறு:—

௧-வேதாரணியேசுரம்சுரலிங்கம்,
௨-இராமலிங்கம்.
௩-சிந்தாமணிவிநாயகர்.
௪-மோக்ஷத்துவாரேசுரலிங்கம்.
௫-காசிவிசுவேசலிங்கம்,
௬-சித்தேசலிங்கம்,
௭-சிதம்பரசபாநாயகர்.
௮-காசியன்னபூரணி.
௯-நகுலேசலிங்கம்.
௧௦-காஞ்சியேகாமபரேசுரன்.
௧௧-காளத்தியீசுரலிங்கம்.
௧௨-கும்பேசுரன்.
௧௩-மதுரைச்சொக்கலிங்கம்.
௧௪-திருகேதாரேசுரலிங்கம்.
௧௫-திருவாரூர்வனமீகநாதர்.
௧௬-திருகோகரணேசலிங்கம்.
௧௭-ஆடகேசலிங்கம்; வியாசதீர்த்தக்கிழ்கரை.
௧௮-சித்திரகுத்தேசலிங்கம்.
௧௯-வியாசேசலிங்கம.
௨௦-நாகேசலிங்கம்.
௨௧-சந்திரலிங்கம்.
௨௨-இராமேசலிங்கம்.
௨௩-தாரகேச்சுரலிங்கம்.[தென்கரை
௨௪-ஆடகேசலிங்கம்; மணிகன்னித்
௨௫-விததியேசலிங்கம்.
௨௬-சராசந்தேசலிங்கம்.
௨௭-ஆதிவராகேசலிங்கம.
௨௮-சோமநாதலிங்கம்.
௨௯-லனிதேசலிங்கம்.
௩௦-தண்டிவிநாயகர்.
௩௧-அரிச்சந்திரேசலிங்கம்.
௩௨-அரிகரபுததிரர்.
௩௩-கெங்கேசலிங்கம்.
௩௪-வைரவக்கடவுள்.
௩௫-கெங்காதேவி.
௩௬-கேசவாதீசலிங்கம்.
௩௭-வாசுகேசலிங்கம்.
௩௮-சுவிர்த்தேசலிங்கம்.
௩௯-பருப்பதேசலிங்கம்.
௪௦-மணிகன்னிகேசுரன்.
௪௧-க்ஷேத்திரபாலகர்.
௪௨-நந்திகேசுவரலிங்கம்
௪௩-பிருங்கிருடிலிங்கம்.
௪௪-பரான்னேசுவரலிங்கம்.
௪௫-பரத்திரவியேசுவரலிங்கம்.
௪௬-பிரதிக்கிரேசுரலிங்கம்.
௪௭-அப்சரசலிங்கம்.
௪௮-மார்க்கண்டேயலிங்கம்.
௪௯-பராபவாதேசலிங்கம்.
௫௦-இந்திரலிங்கம்.
௫௧-அகத்தியேசலிங்கம்.
௫௨-லோபாமுத்திரேசலிங்கம்.
௫௩-கண்ணுவலிங்கம.
௫௪-அத்திரிலிங்கம்.
௫௫-குளகேசலிங்கம், அமுதகடேசலிங்கம்.
௫௬-கணேசலிங்கம்.
௫௭-சண்முகலிங்கம.
௫௮-சூரியலிங்கம.
௫௯-சந்திரலிங்கம்.
௬௦-சத்தமருத்திலிங்கம்.
௬௧-பிரமலிங்கம்.
௬௨-வருணலிங்கம்.
௬௩-வாயுவேசன.
௬௪-விட்டுணுலிங்கம்.
௬௫-வசிட்டலிங்கம்.
௬௬-காலாக்கினியுருத்திரலிங்கம்.
௬௭-குபேரலிங்கம.
௬௮-பராசரலிங்கம்.
௬௯-சேதுமாதவர்.
௭௦-வீரகத்திவிமோசகவிநாயகர்.
௭௧-சுப்பிரமணியக்கடவுள்.
௭௨-யாழைப்பழித்தமொழியம்மை.
௭௩-புவனிவிடங்கேசர்.
௭௪-உமாமணவாளக்கோலநாயகர்.
௭௫-தேவபத்தசபாநாயகலிங்கம்.இவ்விலிங்கத்தைத் தறகாலத்தார் சோழீசுரவுடையவரெனவழங்குப.
௭௬-தேவபததசபாநாயகர்.

திருச்சிற்றம்பலம்.

விடங்கச்சருக்கத்து (கக௯) ம் பக்கத்து (௪௬) ம் பாட்டுக்

குறிப்புரையில் சேர்ந்துழிக்காட்டுதும் எனக்கூறிய

சத்தவித நடனங்கள் வருமாறு:—

திருவாரூர்-வீதிவிடங்கர்-அஜபாநடனம்.
திருக்காறாயல்-ஆதிவிடங்கர்-குக்குடநடனம்.
திருமறைக்காடு-புவனிவிடங்கர்-ஹம்ஸபாதநடனம்,
திருக்கோளிலி-அவனிவிடங்கர்-பிருங்கநடனம.
திருநாகை-சுந்தரவிடங்கர்-வீசிநடனம்.
திருவாய்மூர்-நீலவிடங்கர்-கமலநடனம்.
திருநள்ளாறு-நகவிடங்கர்-உன்மத்தநடனம். (இந்நகவிடங்கத்தை நகரவிடங்கம் என்பாருமுளர்.)

இதற்குப்பிரமாணம்:—

ஸ்காந்தே.

த்யாகராஜமாஹாத்ம்யம்.

ஸ்ரீவல்மீகேஜபாநடம் த்வயமஹோவீதீவிடங்காஹ்வயம்
ஸ்ரீகாறாயலவாஸகுக்குடநடம் சாதிம் ச நாகோஹரம் |
வேதாரண்யமஹம் ஸபாதநடநம் ஹம்ஸ நீவிடங்காஹ்வயம்
ஸாக்ஷம் ப்ருங்கநடம் ச கோளிலிபுரே நிஷ்டம் ச ஸத்யாவநம் ||

காயாரோஹணமம் ஸுந்தரவிடங்கம் வீசீநடம்
வாம் ஸ்ரீநீலவிடங்கமேவ கமலம் ந்ருத்தம் ததாய்மூர்புரே |
உன்மத்தாக்யநடம் ஸுந்தரநகம் நள்ளாறுவாஸம் ததா
நாகேசம் நகரம் ஸதா ஸுவிலஸத்யாகாத் நடக்ஷேத்ரகம்||

திருச்சிற்றம்பலம்,

பிழைதிருத்தம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௮௭	௩௪	௨	வுறுநதீங்கும்.	வுறுந்தீங்கும்.
௯௮	௧௩	௧	மெவி.	மேவி.
௧௧௨	௩௮	௧	நமபனை.	நம்பனை.
௧௧௮	௩௧	௩	யனறி.	யன்றி.
௧௧௯	௩௭	௨	பரிவினாக்கமுத	பரிவினர்க்கமுத.
௧௫௨	௬௩	௪	தாரயப்புவி.	தராய்ப்புவி.
௧௫௫	௧௩	௨	வனபபெயர்.	வனப்பெயர்.
௨௫௩	௧௬	௪	மென்பபேர்.	மெனபபேர்.
௨௬௨	நாமம	௩	கோலாகனது.	கோலாகலனது.
௨௭௪	௪௪	௨	காதாலாற்.	காதலாற்.
௨௮௨	௫௬	௧	முயையிறனை.	முறையினை.
௨௯௨	௪	௪	சாற்றினனனே.	சாற்றினனே.
௨௯௩	௦	௨	மிதகிருரககு.	மிததிரருக்கு.
௨௯௭	௩௪ உரை	௨	சந்திரகேசரர்.	சந்திரசேகரர்.
௩௦௧	௫௫ உரை	௪	சூக்கும்வுடமபை.	சூக்குமவுடம்பை.
௩௦௯	௬௪ உரை	௨	எமபபடி.	எப்படி.
௩௧௭	௨	௪	டனைகசணுற்ருன.	மனைக்கணுற்ருன்.
௩௧௮	௭	௩	மாதாலா.	மாதலா.
௩௨௪	௫௧	௪	வேநதி.	வேதநதி.
,,	௫௨	௧	யமபலன்.	யமலன்.
௩௪௬	௫	௧	யினெிடும்.	யினெடும்.
௩௪௮	௧௫	௧	தார்ளுடல.	தார்களுடல.
௩௮௧	௦	௧	பத்திரச்ருக்கம்.	பததிரச்சருக்கம்.
௪௨௦*	௧௭	௧	தெகி.	தேகி.
௪௨௬	௬	௪	பயில.	பயில்.
௪௩௧	௨௦	௪	ரினப.	ரின்ப.
௪௫௦	௩௧	௨	ணியல.	ணியல்.
௪௫௧	௧௧	௩	முனனு.	முன்னு.

☞ இப்புராணத்தை நாம் அச்சிட ஆரம்பித்த சிலதினங்களுள், அச்சிடுவிக்கும் ஐயாவவர்களுககுச் சரீராரோக்கியமின்மை ஆரம்பித்தமையின், அதுபற்றி அத்தியாவசியகம் அச்சிடும்படி நேர்ந்ததாகலின், அகோராத்திரம் விரைநதச்சிட்டு வநதமையே, சிறுபானமை பிழை சம்பவித்தற் கேதுவாயிற்று. அவற்றுள் அகப்படுதற் கரியன பல ஈண்டெடுத்துக்காட்டப்பட்டன. சில அகப்படுதற் கெளியனவாகலின், அவறறை நேர்நதழித்திருத்திப்படித்துக்கொள்க.

திருச்சிற்றம்பலம.

உ

சிவமயம்.

தேவாரம்.

திருமறைக்காடு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிராகம்.

பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

சிலைதனைநடுவிடைநிறுவியொர்சினமலியரவதுகொடுதிவி
தலமலிசுரரசுரர்களொலிசலசலகடல்கடைவுழிமிகு
கொலைமலிவிடமெழவவருடல்குலைதரவதுநுகர்பவனெழில்
மலைமலிமதில்புடைதழுவியமறைவனமமர்தருபரமனே. (௧)

கரமுதலியவவயவமவைகடுவிடவரவதுகொடுவரு
வரன்முறையணிதருமவனடல்வலிமிகுபுலியதளுடையின
னிரவலர்துயர்கெடுவகைநினையிமையவர்புரமெழில்பெறவளர்
மரநிகர்கொடைமனிதர்கள்பயினமறைவனமமர்தருபரமனே. (௨)

இழைவளர்தருமுலைமலைமகளினிதுறைதருமெழிலுருவினன்
முழையினின்மிகுதுயிலுறுமரிமுசுவொடுமெழமுளரியொடெழு
கழைநுகர்தருகரியிரிதருகயிலையின்மலிபவனிருளறு
மழைதவழ்தருபொழினிலவியமறைவனமமர்தருபரமனே. (௩)

நலமிகுதிருவிதழியின்மலர்நகுதலையொடுகனகியின்முகை
பலசுரநதிபடவரவொடுமதிபொதிசடைமுடியினன்மிகு
தலநிலவியமனிதர்களொடுதேவருமுயறருமுனிவர்கடம
மலமறுவகைமனநினைதருமறைவனமமர்தருபரமனே. (௪)

கதிமலிகளிறதுபிளிறிடவுரிசெய்தவதிகுணனுயர்பசு
பதியதன்மிசைவருபசுபதிபலகலையவைமுறைமுறையுணர்
விதியறிதருநெறியமர்முனிகணனொடுமிகுதவமுயறரு
மதிநிபுணர்கள்வழிபடவளர்மறைவனமமர்தருபரனே. (௫)

கறைமலிதிரிசிகைபடையடல்கனன்மழுவெழுதரவெறிமறி
முறைமுறையொலிதமருகமுடைதலைமுகிழ்மலிகணிவடமுக
முறைதருகரனுலகினிலுயரொளிபெறுவகைநினைவொடுமலர்
மறையவன்மறைவழிவழிபடுமறைவனமமர்தருபரமனே. (௬)

இருநிலனதுபுனலிடைமடிதரவெரிபுகவெரியதுமிகு
பெருவளியினிலவிதரவளிகெடவியனிடைமுழுவதுகெட
விருவர்களுடல்பொறையொடுதிரியெழிலுருவுடையவனினமலர்
மருவியவறுபதமிசைமுரன்மறைவனமமர்தருபரமனே. (௭)

சனம்வெருவுறவருதசமுகனொருபதுமுடியொடுமிருபது
கரமருவியபுயநெரிவகைகழலடியிலொர்விரனிறுவின
னினமலிகணநிசிசரன்மகிழ்வுறவருள்செய்தகருணையனென
மனமகிழ்வொடுமறைமுறையுணர்மறைவனமமர்தருபரமனே. (௮)

அணிமலர்மகடலைமகனயனறிவரியதொர்பரிசினிலெரி
திணிதருதிரளுருவளர்தரவவர்வெருவுறலொடுதுதிசெய்து
பணியுறவெளியுருவியபரனவனுரைமலிகடறிரளெழு
மணிவளரொளிவெயின்மிகுதருமறைவனமமர்தருபரமனே. (௯)

இயல்வழிதரவிதுசெலவுறவினமயிலிறகுறுதழையொடு
செயன்மருவியசிறுகடமுடியடைகையர்தலைபறிசெய்துதவ
முயல்பவர்துவர்படமுடல்பொதிபவரறிவருபரனவனணி
வயலினில்வளைவளமருவியமறைவனமமர்தருபரமனே. (௧௦)

வசையறுமலர்மகணிலவியமறைவனமமர்பரமனைநினை
பசையொடுமிகுகலைபலபயில்புலவர்கள்புகழ்வழிவளர்தரு
மிசையமர்கழுமலநகரிறைதமிழ்விரகனதுரையியல்வல
விசைமலிதமிழொருபதும்வல்லவருலகினிலெழில்பெறுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சதுரம்மறைதான்றுதிசெய்துவணங்கு
மதுரம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
இதுநன்கிறைவைத்தருள்செய்கவெனக்குன்
கதவந்திருக்காப்புக்கொளுங்கருத்தாலே. (௧)

சங்கந்தரளம்மவை தான்கரைக்கெற்றும்
வங்கக்கடல்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
மங்கையுமைபாகமுமாகவிதென்கொல்
கங்கைசடைமேலடைவித்தகருத்தே. (௨)

குரவங்குருக்கத்திகள்புன்னைகண்ஞாழன்
மருவும்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
சிரமும்மலருந்திகழ்செஞ்சடைதன்மே
லரவம்மதியோடடைவித்தலழகே. (௩)

படர்செம்பவளத்தொடுபன்மலர்முத்த
மடலம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
வுடலமுமைபங்கமதாகியுமென்கொல்
கடனஞ்சமுதாவதுவுண்டகருத்தே. (௪)

வானோர்மறைமாதவத்தோர்வழிபட்ட
தேனார்பொழில்சூழ்மறைக்காட்டுறைசெல்வா
ஏனோர்தொழுதேத்தவிருந்தநீயென்கொல்
கானார்கடுவேடுவனானகருத்தே. (௫)

பலகாலங்கள்வேதங்கள்பாதங்கள்போற்றி
மலரால்வழிபாடுசெய்மாமறைக்காடா
வுலகேழுடையாய்கடைதோறுமுனென்கொ
றலைசேர்பலிகொண்டதிலுண்டதுதானே. (௬)

வேலாவலயத்தயலேமிளிர்வெய்துஞ்
சேலார்திருமாமறைக்காட்டுறைசெல்வா
மாலோடயனிந்திரனஞ்சமுனென்கொல்
காலார்சிலைக்காமனைக்காய்ந்தகருத்தே. (௭)

கலங்கொள்கடலோதமுலாவுகரைமேல்
வலங்கொள்பவர்வாழ்த்திசைக்கும்மறைக்காடா
இலங்கையுடையானடர்ப்பட்டிடரெய்த
வலங்கல்விரலூன்றியருள்செய்தவாறே. (௮)

கோனென்றுபல்கோடியுருத்திரர்போற்றுந்
தேனம்பொழில்சூழ்மறைக்காட்டுறைசெல்வா
ஏனங்கழுகானவருன்னைமுனென்கொல்
வானந்தலமண்டியுங்கண்டிலாவாறே. (௯)

வேதம்பலவோமம்வியந்தடிபோற்ற
வோதம்முலவும்மறைக்காட்டிலுறைவா
ஏதில்சமண்சாக்கியர்வாக்கிவையென்கொ
லாதரொடுதோமலர்தூற்றியவாறே. (௧௦)

காழிக்கரான்கலைஞானசம்பந்தன்
வாழிம்மறைக்காடனைவாய்ந்ததிவித்த
வேழின்னிசைமாலையீரைந்திவைவல்லார்
வாழியுலகோர்தொழவானடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருமறைக்காட்டிலே, திருநாவுக்கரசுநாயனார்வேண்டுகோளின்படி திருஞானசம்பந்தப்பிள்ளையார் "சதுரம்மறை" என்னும் இத்திருப்பதிகம் பாடியருளும்போது, இதனை முதற்றேவாரத்திலேயே திருக்கதவு அடைக்கப்பட்டது.

பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குவெண்மணற்கானற்பொருகடற்றிரைதவழ்முத்தங்
கங்குலாரிருள்போழுங்கலிமறைககாடமர்ந்தார்தாந்
திங்கள்சூடினரேனுந்திரிபுரமெரித்தனரேனு
மெங்குமெங்கள்பிரானார்புகழலதிகழ்பழியிலரே. (க)

கூனிளம்பிறைசூடிக்கொடுவரித்தோலுடையாடை
யானிலங்கிளரைந்துமாடுவர்பூண்பதுமரவந
கானலங்கழியோதங்கரையொடுகதிர்மணிததும்பத்
தேனலங்கமழ்சோலைத்திருமறைக்காடமர்ந்தாரே. (உ)

நுண்ணிதாய்வெளிதாகிநூல்கிடந்திலங்குபொன்மார்பிற்
பண்ணியாழெனமுரலும்பணிமொழியுமையொருபாகன்
றண்ணிதாயவெள்ளருவிசலசலநுரைமணிததும்பக்
கண்ணிதானுமோர்பிறையார்கலிமறைக்காடமர்ந்தாரே. (ந)

ஏழைவெண்குருகயலேயிளம்பெடைதனதெனக்கருதித்
தாழைவெண்மடற்புல்குந்தண்மறைக்காடமர்ந்தார்தா
மாழையங்கயலொண்கண்மலைமகள்கணவனதடியி
னீழலேசரணாகநினைபவர்வினைநலிவிலரே. (ச)

அரவம்வீக்கியவரையுமதிர்கழனமுழவியவடியும்
பரவநாஞ்செய்தபாவம்பறைதரவருளுவர்பதிதான்
மரவநீடுயர்சோலைமழலைவண்டியாழ்செயுமறைக்காட்
டிரவுமெல்லியும்பகலுமேத்துதல்குணமெனலாமே. (ரு)

பல்லிலோடுகையேந்திப்பாடியுமாடியும்பலிதே
ரல்லல்வாழ்க்கையரேனுமழகியதறிவரெம்மடிகள்
புல்லமேறுவர்பூதம்புடைசெலவுழிதர்வர்க்கிடமா
மல்குவெண்டிரையோதமாமறைக்காடதுதானே. (௬)

நாகந்தான்கயிறாகநளிர்வரையதற்குமத்தாகப்
பாகந்தேவரொடசுரர்படுகடலளறெழக்கடைய
வேகநஞ்செழவாங்கேவெருவொடிரிந்தெங்குமோட
வாகந்தன்னில்வைத்தமிர்தமாக்குவித்தானமறைக்காடே. (௭)

தக்கன்வேள்வியைத்தகர்த்தோன்றனதொருபெருமையையோரான்
மிக்குமேறசென்றுமலையையெடுத்தலுமலைமகணடுங்க
நக்குத்தன்றிருவிரலாலூன்றலுநெரிந்தரக்கன்
பக்கவாயும்விட்டலறபரிந்தவன்பதிமறைக்காடே. (௮)

விண்டமாமலரோனும்விளங்கொளியரவணையானும்
பண்டுங்காண்பரிதாயபரிசினனவனுறைபதிதான்
கண்டலங்கழியோதங்கரையொடுகதிர்மணிததும்ப
வண்டலங்கமழ்சோலைமாமறைக்காடதுதானே. (௯)

பெரியவாகியகுடையும்பீலியுமவைவெயிற்கரவாக்
கரியமண்டைகையோதிக்கல்லெனவுழிதருங்கழுக்க
ளரியவாகவுண்டோதுமவர்திறமொழிந்துநம்மடிகள்
பெரியசீர்மறைக்காடேபேணுமின்மனமுடையீரே. (௧௦)

மையுலாம்பொழில்சூழ்ந்தமாமறைக்காடமர்ந்தாரைக்
கையினூற்றெழுதெழுவான்காழியுண்ஞானசம்பந்தன்
செய்தசெந்தமிழ்பத்துஞ்சிந்தையுட்சேர்க்கவல்லார்போய்ப்
பொய்யில்வானவரோடும்புகவலர்கொளவலர்புகழே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம்.

பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கற்பொலிசுரத்தினெரிகானினிடைமாநடமதாடிமடவா
ரிற்பலிகொளப்புகுதுமெந்தைபெருமானதிடமென்பர்புவிமேன்
மற்பொலிகலிக்கடன்மலைக்குவடெனத்திரைகொழித்தமணியை
விற்பொலிநுதற்கொடியிடைக்கணிகைமார்கவரும்வேதவனமே. (௧)

பண்டிரைபவப்புணரியிற்கனகமால்வரையைநட்டரவினைக்
கொண்டுகயிறிற்கடையவந்தவிடமுண்டகுழகன்றனிடமாம்
வண்டிரைநிழற்பொழிலின்மாதவியின்மீதணவுதென்றல்வெறியார்
வெண்டிரைகள்செம்பவளமுந்துகடல்வந்தமொழிவேதவனமே. (௨)

தேவாரம்.

காரியன்மெனோதிநதிமாதைமுடிவார்சடையில்வைத்துமலையார்
காரியொருபான்மகிழுநம்பருறைவென்பர்நெடுமாடமறுகிற்
றேரியல்விழாவினொலிதிண்பணிலமொண்படகநாளுமிசையால்
வேரிமலிவார்குழனன்மாதரிசைபாடலொலிவேதவனமே. (௧)

நீறுதிருமேனியின்மிசைத்தொளிபெறத்தடவிவந்திடபமே
யேறியுலகங்கடொறும்பிச்சைநுகரிச்சையரிருந்தபதியா
மூறுபொருளின்றமிழியற்கிளவிதேருமடமாதருடனார்
வேறுதிசையாடவர்கள்கூறவிசைதேருமெழில்வேதவனமே. (௨)

கத்திரிகைதுத்திரிகறங்குதுடிதக்கையொடிடக்கைபடக
மெத்தனையுலப்பில்கருவித்திரளலம்பவிமையோர்கள்பரச
வொத்தர்மிதித்துநடமிட்டவொருவர்க்கிடமதெனபருலகின்
மெய்த்தகையபத்தரொடுசித்தாகண்மிடைந்துகளுமவேதவனமே. (௩)

மாலைமதிவாளரவுகொன்றைமலர்துன்றுசடைநின்றுசுழலக்
காலையிலெழுந்தகதிர்தாரகைமடங்கவனலாடுமரனூர்
சோலையின்மரங்கடொறுமிண்டியினவண்டுமதுவுண்டிசைசெய
வேலையொலிசங்குதிரைவங்கசுறவங்கொணருமவேதவனமே. (௪)

வஞ்சகமனத்தவுணர்வல்லரணமன்றவியவார்சிலைவளைத்
தஞ்சகமவித்தவமரர்க்கமரனாதிபெருமானதிடமாங்
கிஞ்சுகவிதழ்க்கனிகளூறியசெவாயவர்கள்பாடல்பயில
விஞ்சகவியக்கர்முனிவககணநிறைந்துமிடைவேதவனமே. (௫)

முடித்தலைகள்பத்துடைமுரட்டுருவரக்கனைநெருக்கிவிரலா
லடித்தலமுன்வைத்தலமரக்கருணைவைத்தவனிடம்பலதுயர்
கெடுத்தலைநினைத்தறவியற்றுதல்கிளர்ந்துபுலவாணர்வறுமை
விடுத்தலைமதித்துநிதிநல்குமவர்மல்குபதிவேதவனமே. (௬)

வாசமலர்மேவியுறைவானுநெடுமாலுமறியாதநெறியைக்
கூசுதல்செயாதவமணரொடுதேராகுறுகாதவரனூர்
காசுமணிவார்கனகநீடுகடலோடுதிரைவார்துவலைமேல
வீசுவலைவாணரவைவாரிவிலைபேசுமெழிலவேதவனமே. (௯-௰)

மந்தமுரவங்கடல்வளங்கெழுவுகாழிபதிமன்னுகவுணி
வெந்தபொடிநீறணியும்வேதவனமேவுசிவனின்னருளினாற்
சந்தமிவைதண்டமிழினின்னிசையெனப்பரவுபாடலுலகிற்
பந்தனுரைகொண்டுமொழிவார்கள்பயில்வார்களுயர்வானுலகமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

கோளறுதிருப்பதிகம்.

பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தென்னுளமேபுகுந்தவதனா
ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளிசனிபாம்பிரண்டுமுடனே
யாசறுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (க)

என்பொடுகொம்பொடாமையிவைமார்பிலங்கவெருதேறியேழையுடனே
பொன்பொதிமத்தமாலைபுனல்சூடிவந்தென்னுளமேபுகுந்தவதனு [தா
லொன்பதொடொன்றொடேழுபதினெட்டொடாறுமுடனாயநாள்களவை
மன்பொடுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (உ)

உருவளர்பவளமேனியொளிநீறணிந்துவுமையோடும்வெள்ளைவிடைமேன்
முருகலர்கொன்றைதிங்கண்முடிமேலணிந்தென்னுளமேபுகுந்தவதனாற்
றிருமகள்கலையதூர்திசெயமாதுபூமிதிசைதெய்வமானபலவு
மருநெறிநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௩)

மதிநுதன்மங்கையோடுவடபாலிருந்துமறையோதுமெங்கள்பரம
னதியொடுகொன்றைமாலைமுடிமேலணிந்தென்னுளமேபுகுந்தவதனாற்
கொதியுறுகாலனங்கிநமனோடுதூதர்கொடுநோய்களானபலவு
மதிகுணநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௪)

நஞ்சணிகண்டனெந்தைமடவாடனோடுவிடையேறுநங்கள்பரமன்
றுஞ்சிருள்வன்னிகொன்றைமுடிமேலணிந்தென்னுளமேபுகுந்தவதனால்
வெஞ்சினவவுணரோடுமுருமிடியுமின்னுமிகையானபூதமவையு
மஞ்சிடுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௫)

வாள்வரியதளதாடைவரிகோவணத்தர்மடவாடனோடுமுடனாய்
நாண்மலர்வன்னிகொன்றைநதிசூடிவந்தென்னுளமேபுகுந்தவதனாற்
கோளரியுழுவையோடுகொலையானைகேழல்கொடுநாகமோடுகரடி
யாளரிநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௬)

செப்பிளமுலைநன்மங்கையொருபாகமாகவிடையேறுசெல்வனடைவா
ரொப்பிளமதியுமப்புமுடிமேலணிந்தென்னுளமேபுகுந்தவதனால்
வெப்பொடுகுளிரும்வாதமிகையானபித்தும்வினையானவந்துநலியா
வப்படிநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௭)

வேள்படவிழிசெய்தன்றுவிடைமேலிருந்துமடவாடனோடுமுடனாய்
வாண்மதிவன்னிகொன்றைமலர்சூடிவந்தென்னுளமேபுகுந்தவதனா
லேழ்கடல்சூழிலங்கையரையன்றனோடுமிடரானவந்துநலியா
வாழ்கடனல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௮)

ருக

பலபலவேடமாகும்பரனாரிபாகன்பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்குமுடிமேலணிந்தென்னுளமேபுகுந்தவதனால்
மலர்மிசையோனுமாலுமறையோடுதேவர்வருகாலமானபலவு
மலைகடன்மேருநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௯)

கொத்தலர்குழலியோடுவிசயற்குநல்குகுணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியுநாகமுடிமேலணிந்தென்னுளமேபுகுந்தவதனாற்
புத்தரொடமணைவாதிலழிவிக்குமண்ணறிருநீறுசெம்மைதிடமே
யத்தகுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௧௦)

தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெறுன்னிவளர்செம்பொனெங்குநிகழ
நான்முகனாதியாயபிரமாபுரத்துமறைஞானஞானமுனிவன
றானுறுகோளுநாளுமடியாரைவந்துநலியாதவண்ணமுரைசெ
யானசொன்மாலையோதுமடியார்கள்வானிலரசாள்வராணைநமதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், வேதாரணியத்திலே எழுந்தருளியிருக்கும்போது, பாண்டிநாடெங்கும் வைதிகமார்க்கமும் சைவமார்க்கமுங் குன்றிச், சமணசமயமேவிருத்தியாகப், பாண்டியனுடைய மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும், முதன்மந்திரியாராகிய குலச்சிறைநாயனாருந்தவிர மற்றைப் பாண்டியனும், பாண்டிநாட்டாரும், சமணர்களுடைய துர்ப்போதனையினாலே விபூதிசாதனங்களைவிட்டு, ஆருகதமதத்திலே பிரவேசித்தமையால், அவ்விருவரும் மிக்கக்கவலைகொண்டிருக்குஞ் சமாசாரத்தைப் பிள்ளையார் கேள்வியுற்று, அப்பமூர்த்தியோடுந் திருக்கோயிலிற்சென்று, சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு, திருக்கோபுரத்துள் இருந்து, பாண்டிமாதேவியாரும், குலச்சிறைநாயனாரும் சொல்லியனுப்பிய வார்த்தையை அவருக்குச்சொல்லிப், பாண்டிநாட்டுக்கு எழுந்தருளுதற்குத் திருவுளங்கொண்டருளினார். அப்பொழுது அப்பமூர்த்தி தேவரீர் சிறுபிள்ளையாய் இருக்கின்றீர், அச்சமணர்களுடைய வஞ்சனைக்கோ எல்லையில்லை. தேவரீருக்கு இப்போது கிரகங்கள் வலியில, ஆதலால், தேவரீர் அவ்விடத்திற்கு எழுந்தருளுதற்கு உடன்படவொண்ணாது என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையார், சிவபிரான் நம்முடையசிந்தையே கோயில்கொண்டு எழுந்தருளியிருத்தலினாலே நமக்குத் தீங்குவாராது என்றுசொல்லிச் சிவபிரானுடைய திருவடிகளைத் துதித்து ‘வேயுறுதோளி” என்னுங் கோளறுதிருப்பதிகத்தைப் பாடித்துதித்து, வேதாரணியத்தைநீங்கி மதுரைக்குச்சென்று, சமணர்களை வாதிலேவென்று, விபூதிசாதனத்தை விளக்கி விருத்திசெய்தருளினார்.

திருநாவுக்கரசுநாயனூர்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

இந்திரனோடுதேவரிருடிகளேத்துகின்ற
சுந்தரமானார்போலுந்துதிக்கலாஞ்சோதிபோலுஞ்
சந்திரனோடுகங்கையரவையுஞ்சடையுள்வைத்து
மந்திரமானார்போலுமாமறைக்காடனாரே. (க)

தேயனநாடராகிதேவர்கடேவர்போலும்
பாயனநாடறுக்கும்பததாகள்பணியவமமின
காயனநாடுகஙடங்கதனுளார்காளகண்டர்
மாயனநாடர்போலுமாமறைககாடனாரே. (உ)

அறுமையிவ்வுலகுதனையாமெனக்கருதிநின்று
வெறுமையினமனைகள்வாழநதுவினைகளானலிவுறாதே
சிறுமதியரவுகொனறைதிகழ்தருசடையுள்வைதது
மறுமையுமிமமையாவார்மாமறைக்காடனாரே. (ங)

கால்கொடுத்திருகையேற்றிக்கழிநிரைத்திறைச்சிமேய்ந்து
தோல்படுததுதிரநீராறசுவரெடுததிரண்டுவாச
லேல்வுடைத்தாவமைததங்கேழுசாலேகம்பண்ணி
மாலகொடுததாவிவைத்தார்மாமறைக்காடனாரே. (ச)

விண்ணினார்விண்ணினமிக்கார்வேதஙகள்விரும்பியோதப்
பண்ணினார்கினனரங்கள்பததர்கள்பாடியாடக்
கண்ணினார்கண்ணினுள்ளேசோதியாய்நினறவெந்தை
மண்ணினார்வலங்கொண்டேத்துமாமறைக்காடனாரே. (ரு)

அங்கையுளனலும்வைத்தாரறுவகைச்சமயம்வைத்தார்
தங்கையில்வீணைவைத்தார்தமமடிபரவவைத்தார்
திங்களைக்கங்கையோடுதிகழ்தருசடையுள்வைத்தார்
மங்கையைப்பாகம்வைத்தாரமாமறைக்காடனாரே. (சு)

கீதராய்க்கீதங்கேட்டுக்கின்னரந்தன்னைவைத்தார்
வேதராய்வேதமோதிவிளங்கியசோதிவைததா
ரேதராய்நட்டமாடியிட்டமாய்க்கங்கையோடு
மாதையோரபாகம்வைததார்மாமறைக்காடனாரே. (எ)

கனத்தினார்வலியுடையகடிமதிரணமூன்றுஞ்
சினத்தினுட்சினமாய்நின்றுதீயெழச்செறாஆர்போலுந்
தனத்தினைத்தவிர்ந்துநின்றுதம்மடிபரவுவார்க்கு
மனத்தினுண்மாசுதீர்ப்பார்மாமறைக்காடனாரே. (அ)

தேசனைத்தேசன்றன்னைத்தேவர்கள்போற்றிசைப்பார்
வாசனைசெய்துநின்றுவைகலும்வணங்குமின்கள்
காசினைக்கனலையென்றுங்கருத்தினில்வைத்தவர்க்கு
மாசினைத்தீர்ப்பர்போலுமாமறைக்காடனாரே. (௯)

பிணியுடையாக்கைதன்னைப்பிறப்பறுத்துய்யவேண்டிற்
பணியுடைத்தொழில்கள்பூண்டுபத்தர்கள்பற்றினாலே
துணிவுடையரக்கனோடியெடுத்தலுந்தோகையஞ்ச
மணிமுடிப்பத்திறுததார்மாமறைககாடனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தேரையுமேல்கடாவத்திண்ணமாத்தெழித்துநோக்கி
யாரையுமேலுணராவாண்மையான்மிக்கான்றன்னைப்
பாரையுமவிண்ணுமஞ்சப்பரந்ததோண்முடியடர்த்துக்
காரிகையஞ்சலெனபார்கலிமறைக்காடனாரே. (௧)

மூக்கிமுன்வெகுண்டெடுத்தமுடியுடையரக்கர்கோனை
நக்கிருநனூன்றிச்சென்னிநாண்மதிவைத்தவெந்தை
யக்கரவாமைபூண்டவழகனார்கருத்தினாலே
தெக்குநீர்த்திரைகண்மோதுந்திருமறைக்காடனாரே. (௨)

மிகப்பெருத்துலாவமிக்கானக்கொருதேர்கடாவி
யகப்படுததென்றுதானுமரண்மையானமிக்கரக்க
னுகைத்தெடுத்தான்மலையையூன்றலுமவனையாங்கே
நகைப்படுத்தருளினானூர்நான்மறைக்காடுதானே, (௩)

அந்தரந்தேர்கடாவியாரிவனென்றுசொல்லி
யுந்தினான்மாமலையையூன்றலுமொள்ளரக்கன்
பந்தமாந்தலைகள்பத்தும்வாய்கள்விட்டலறிவீழச்
சிந்தனைசெய்துவிட்டார்திருமறைக்காடனாரே. (௪)

தடுக்கவுந்தாங்கவொண்ணாத்தன்வலியுடையனாகிக்
கடுக்கவோர்தேர்கடாவிக்கையிருபதுகளாலு
மெடுப்பனானென்னபண்டமெனறெடுத்தானையேங்க
வடுக்கவேவல்லனூராமணிமறைக்காடுதானே. (௫)

நாண்முடிக்கின்றசீரானடுங்கியேமீதுபோகான்
கோள்பிடித்தார்த்தகையான்கொடியனமாவலியனென்று
நீண்முடிச்சடையர்சேருநீள்வரையெடுக்கலுற்றான்
றோண்முடிநெரியவைத்தார்தொன்மறைக்காடனாரே. (சு)

பத்துவாயிரட்டிக்கைகளுடையன்மாவலியனென்று
பொத்திவாய்த்தீமைசெய்தபொருவலியரக்கர்கோனைக்
கத்திவாய்கதறவன்றுகால்விரலூன்றியிட்டார்
முத்துவாய்த்திரைகண்மோதுமுதுமறைக்காடனாரே. (எ)

பக்கமேவிட்டகையானபாங்கிலாமதியனாகிப்
புக்கனனமாமலைக்கீழ்ப்போதுமாறறியமாட்டான்
மிக்கமாமதிகள்கெட்டுவீரமுமிழந்தவாறே
நக்கனபூதமெல்லாநான்மறைக்காடனார்க்கே. (அ)

நாணஞ்சுகையனாகிநன்முடிபத்தினோடு
பாணஞ்சுமுன்னிழந்தபாங்கிலாமதியனாகி
நீணஞ்சுதானுணராநின்றெடுத்தானையன்று
வேணஞ்சுகைகள்செய்தாரெழின்மறைக்காடனாரே. (கூ)

கங்கைநீர்சடையுள்வைக்கக்காண்டலுமங்கைபூடத்
தென்கையான்றேர்கடாவிச்சென்றெடுத்தானமலையை
முனகைமாநரம்புவெட்டிமுனனிருக்கிசைகள்பாட
வங்கைவாளருளினானூரணிமறைககாடுதானே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஓதமால்கடல்பரவியுலகெலா
மாதரார்வலங்கொண்மறைக்காடரைக்
காதல்செய்துகருதப்படுமவர்
பாதமேத்தப்பறையுநம்பாவமே. (க)

பூக்குந்தாழைபுறணியருகெலா
மாக்கந்தானுடைமாமறைககாடரோ
வார்க்குங்காண்பரியீரடியார்தம்மை
நோக்கிக்காண்பதுநும்பணிசெய்யிலே. (உ)

புன்னைஞாழல்புறணியருகெலா
மன்னினார்வலங்கொண்மறைக்காடரோ
வன்னமென்னடையாளையோர்பாகமாச்
சின்னவேடமுகப்பதுசெல்வமே. (ந)

அட்டமாமலர்சூடியடம்பொடு
வட்டப்புன்சடைமாமறைக்காடரோ
கட்டமாடியுநான்மறைபாடியு
மிட்டமாகவிருக்குமிடமிதே. (௪)

நெய்தலாம்பனிறைவயல்சூழ்தரு
மெய்யினார்வலக்கொண்மறைக்காடரோ
தையலபாகநகொண்டீர்கவர்புனசடைப்
பைதலவெண்பிறைபாமபுடன்வைப்பதே. (௫)

அஞ்சம்போதுந்துயிலின்றியேத்துவார்
வஞ்சினறிவலங்கொண்மறைககாடரோ
பஞ்சின்மெலலடிப்பாவைபலிகொணர்ந்
தஞ்சிநிறபதுமைநதலைநாகமே. (௬)

விண்ணுளார்விரும்பியெதிர்கொள்ளவே
மண்ணுளார்வணங்குமமறைக்காடரோ
கண்ணினுலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகததிறந்தருள்செய்மமினே. (௭)

திருவினார்செல்வமல்குவிழாவணி
மருவினாவலநகொணமறைக்காடரோ
வுருவினாளுமையாளையொர்பாகமாய்
மருவினார்கங்கையைச்சென்னிதன்னிலே. (௮)

சங்குவந்தலைக்குந்தடங்கானல்வாய்
வங்கமாாவலங்கொண்மறைக்காடரோ
கங்கைசெஞ்சடைவைபபதுமனறியே
யங்கையிலலனலேந்தலழகிதே. (௯)

குறைக்காட்டான்விட்டதேர்குத்தமாமலை
யிறைக்காட்டியெடுத்தான்றலையீரைந்து
மறைக்காட்டானிறையூன்றலுமவாய்விட்டா
னிறைககாட்டாயெமபிரானுனையேத்தவே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே. (௧)

ஈண்டுசெஞ்சடையாகத்துளீசரோ
மூண்டகார்முகிலின்முறிக்கண்டரோ
வாணுகொண்டநீரேயருள்செய்திடு
நீண்டமாக்கதவின்வலிநீக்குமே. (உ)

அட்டமூர்த்தியதாகியவப்பரோ
துட்டர்வானபுரஞ்சுட்டசுவண்டரோ
பட்டங்கட்டியசென்னிப்பரமரோ
சட்டவிக்கதவந்திறப்பிம்மினே. (௩)

அரியமாமறையோதியநாவரோ
பெரியவான்புரஞ்சுட்டசுவண்டரோ
விரிகொளகோவணவாடைவிருத்தரோ
பெரியவான்கதவம்பிரிவிக்கவே. (௪)

மலையினீடிருக்கும்மறைக்காடரோ
கலைகள்வந்திறைஞ்சுங்கழலேத்தரோ
விலையினமாமணிவண்ணவுருவரோ
தொலைவிலாக்கதவந்துணைநீக்குமே. (௫)

பூக்குந்தாழைபுறணியருகெலா
மாக்குந்தண்பொழில்சூழ்மறைக்காடரோ
வார்க்குநகாணபரியீரடிசேளுமை
நோக்கிக்காணக்கதவைத்திறவுமே. (௬)

வேர்த்தவெண்பொடிப்பூசும்விகிர்தரோ
வந்தமிலவியணிமறைக்காடரோ
வெந்தைநீயடியாரவந்திறைஞ்சிட
விந்தமாக்கதவம்பிணிநீக்குமே. (௭)

ஆறுசூடுமணிமறைக்காடரோ
கூறுமாணுமைக்கீந்தகுழகரோ
வேறதேறியவெம்பெருமானிந்த
மாறிலாக்கதவம்வலிநீக்குமே. (௮)

சுண்ணவெண்பொடிப்பூசுஞ்சுவண்டரோ
பண்ணியேறுகந்தேறும்பரமரோ
வண்ணலாதியணிமறைக்காடரோ
திண்ணமாக்கதவந்திறப்பிம்மினே. (௯)

அரக்கனைவிரலாலடர்த்திட்டநீ
ரிரக்கமொன்றிலீரெம்பெருமானிரே
சுரக்கும்புன்னைகள்சூழ்மறைக்காடரோ
சரக்கவிக்கதவந்திறப்பிம்மினே. (௰)

திருச்சிற்றம்பலம்.

ஆளுடையபிள்ளையாரும் அப்பமூர்த்தியும் பலதலங்களைத்தரிசித்து வணங்கிக்கொண்டு, திருமறைக்காட்டையடைந்து, ஆலயத்துட்சென்று, வலமவந்து, வேதங்கள் அருச்சித்துத் திருக்காப்புச்செய்த திருக்கதவுக்குமுன்வந்து, பிள்ளையார் அப்பமூர்த்தியைநோக்கி, அப்பரே நாம் சுவாமியை அபிமுகத்திருவாயில் வழியாகச்சென்று தரிசிக்கத் திருக்கதவுதிறக்கும்படி திருப்பதிகம்பாடும் என்றார். அப்பமூர்த்தி "பண்ணினேர்மொழியாள்" என்னுஞ்சொற்றொடரைமுதலாகவுடைய இத்திருப்பதிகம்பாடக்கதவுதிறக்கப்படாமல் தாழ்த்ததுகண்டு திருக்கடைக்காப்பிலே "இரக்கமொன்றிலீர்" என்று பாடிவணங்க, உடனே திருக்கதவம் திறக்கப்பட்டது. திறக்கப்படுதலும், நாயன்மாரிருவரும மற்றைச்சிவனடியார்களும ஆச்சரியமுற்றுத்திருவருளைவியந்து, உள்ளே பிரவேசித்துச் சுவாமியை நேரேதரிசித்துவணங்கி ஆனந்தமடைந்தார்கள்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தூண்டுசுடரனையசோதிகண்டாய்தொல்லமரர்சூளாமணிதான்கண்டாய், காண்டற்கரியகடவுள்கண்டாய்கருதுவார்க்காற்றவெளியான்கண்டாய், வேண்டுவார்வேண்டுவதேயீவான்கண்டாய்மெய்ந்நெறிகண்டாய்விரதமெல்லாம், மாண்டமனத்தார்மனத்தான்கண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௧)

கைகிளரும்வீணைவலவன்கண்டாய்காபாலிகண்டாய்திகழுஞ்சோதி மெய்கிளருஞானவிளக்குக்கண்டாய்மெய்யடியாருள்ளத்தவித்துக்கண்டாய், பைகிளருநாகமசைத்தான்கண்டாய்பராபரன்கண்டாய்பாசூரான்கண்டாய், வைகிளருங்கூர்வாட்படையான்கண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௨)

சிலந்திக்கருண்முன்னஞ்செய்தான்கண்டாய்திரிபுரங்கடீவாய்ப்படுத்தான்கண்டாய், நிலந்திக்குநீர்வளிதீயானான்கண்டாய்நிருபியருபியுமாயினான்கண்டாய், சலந்துக்கச்சென்னிச்சடையான்கண்டாய்தாமரையான்செங்கண்மாலானான்கண்டாய், மலந்துக்கமால்விடையொன்றூர்ந்தான்கண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௩)

கள்ளிமுதுகாட்டிலாடிகண்டாய்காலனையுங்காலாற்கடிந்தான்கண்டாய், புள்ளியுழைமானின்றோலான்கண்டாய்புலியுரிசேராடைப்புனிதன்கண்டாய, வெள்ளிமிளிர்பிறைமேற்சூடிகண்டாய்வெண்ணீற்றான்கண்டாய் நஞ்செந்தின்மேய, வள்ளிமணாளற்குத்தாதைகண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௪)

ஊரிமுழங்கொலிநீரானான்கண்டாய்முழுத்தழல்போன்மேனிமுதல்வன்கண்டா, யேரிநிறைந்தனையசெல்வனகண்டாயின்னடியார்க்கின்பம்விளைப்பானகண்டா, யாரியன்கண்டாய்தமிழன்கண்டாயண்ணாமலையுறையுமண்ணல்கண்டாய், வாரிமதகளிறேபோல்வானகண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௫)

ஆடன்மால்யானையுரித்தான்கண்டாயகத்தியான்பள்ளியமர்ந்தான்கண்டாய், கோடியானகண்டாய்குழகன்கண்டாயகுளிராரூர்கோயிலாக்கொண்டான்கண்டாய், நாடியதனபொருள்களானகண்டாயநன்மையோடிம்மைமற்றம்மையெல்லாம, வாடியவாட்டந்தவிர்ப்பான்கண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௬)

வேலைசேர்நஞ்சமிடற்றான்கண்டாய்விண்டவர்பூங்கயிலைவெற்பன்கண்டா, யாலைசேர்வேள்வியழித்தானகண்டாயமரர்களேத்துமண்ணல்கண்டாய், பானெய்சேரானஞ்சுமாடிகண்டாய்பருப்பதத்தான்கண்டாய்பரவைமேனி, மாலையோர்கூறுடையமைந்தனகண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௭)

அம்மைபயக்குமமிர்துகண்டாயந்தேனறெளிகண்டாயாக்கஞ்செய்திட்டிம்மைபயக்கும்பிறைவனகண்டாயென்னெஞ்சேயுனக்கினியானகண்டாய், மெய்ம்மையேஞானவிளக்குக்கண்டாய்வெண்காடன்கண்டாய்வினைகள்போக, மம்மரறுக்குமருந்துகண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே.

மூலநோய்தீர்க்குமுதல்வன்கண்டாய்முத்தமிழுநான்மறையுமானான்கண்டா, யாலின்கீழ்நால்வர்க்கறத்தானகண்டாயாதியுமந்தமுமானான்கண்டாய், பாலவிருத்தனுமானான்கண்டாய்பவளத்தடவரையேபோல்வான்கண்டாய், மாலைசேர்கொன்றைமலிந்தான்கண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௯)

அயனவனுமாலவனுமறியாவண்ணமாரழலாய்நீண்டுகந்தவண்ணல்கண்டாய், துயரிலங்கைவேந்தன்றுளங்கவன்றுசோதிவிரலாலூன்றவைத்தான்கண்டாய், பெயரவற்குப்பேரருள்கள்செய்தானகண்டாய்பேரும்பெரும்படையோடீந்தான்கண்டாய், மயருறுவல்வினைநோய்தீர்ப்பானகண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

யாழைப்பழித்தன்னமொழிமங்கையொருபங்கன்
பேழைச்சடைமுடிமேற்பிறைவைத்தானிடம்பேணிற்
றாழைப்பொழிலூடேசென்றுபூழைத்தலைநுழைந்து
வாழைக்கனிகூழைக்குரங்குண்ணும்மறைக்காடே. (க)

சிகரத்திடையிளவெண்பிறைவைத்தானிடந்தெரியின்
முகரத்திடைமுத்தினொளிபவளத்திரளோதத்
தகரத்திடைதாழைத்திரண்ஞாழற்றிரணீழன்
மகரத்தொடுசுறவங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே. (உ)

அங்கங்களுமறைநான்குடன்விரித்தானிடமறிந்தோந்
தெங்கங்களுநெடும்பெண்ணையும்பழம்வீழ்மணற்படப்பைச்
சங்கங்களுமிலங்கிப்பியும்வலம்புரிகளுமிடறி
வங்கங்களுமுயர்கூம்பொடுவணங்கும்மறைக்காடே. (௩)

நரைவிரவியமயிர்தன்னொடுபஞ்சவடிமார்ப
னுரைவிரவியவுத்தமனிடமுணரலுறுமனமே
குரைவிரவியகுலசேகரக்கொண்டற்றலைவிண்ட
வரைபுரைவனதிரைபொருதிழிந்தெற்றும்மறைக்காடே. (௪)

சங்கைப்படநினையாதெழுநெஞ்சேதொழுதேத்தக்
கங்கைச்சடைமுடியுடையவர்க்கிடமாவதுபரவை
யங்கக்கடலருமாமணியுந்திக்கரைக்கேற்ற
வங்கத்தொடுசுறவங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே. (௫)

அடல்விடையினன்மழுவாளினனலரானணிகொன்றைப்
படருஞ்சடைமுடியுடையவர்க்கிடமாவதுபரவைக்
கடலிடையிடைகழியருகினிற்கடிநாறுதண்கைதை
மடலிடையிடைவெண்குருகெழுமணிநீர்மறைக்காடே. (௬)

முளைவளரிளமதியுடையவர்முனைசெய்தவல்வினைகள்
களைகளைந்தெனையாளல்லுறுகண்டன்னிடஞ்செந்நெல்
வளைவிளைவயற்கயல்பாய்தருகுணவார்மணற்கடல்வாய்
வளைவளையொடுசலஞ்சலங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே. (௭)

நலம்பெரியனசுரும்பார்ந்தனநங்கோனிடமறிந்தோங்
கலம்பெரியனசாருங்கடற்கரைபொருதிழிகங்கைச்
சலம்புரிசடைமுடியுடையவர்க்கிடமாவதுபரவை
வலம்புரியொடுசலஞ்சலங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே. (௮)

குண்டாடியுஞ்சமணாடியுங்குற்றுடுக்கையர்தாமுங்
கண்டார்கண்டகாரணம்மவைகருதாதுதொழுமி
னெண்டோளினன்முக்கணினனேழிசையினனறுகால்
வண்டாடுதண்பொழில்சூழ்ந்தெழுமணிநீர்மறைக்காடே. (௯)

பாரூர்பலப்புடைசூழ்வளவயனூலர்வேந்தன
வாரூர்வனமுலையாளுமைபங்கனமறைக்காட்டை
யாரூரனதமிழ்மாலைகள்பாடும்மடிததொண்டர்
நீரூர்தருநிலனோடுயர்புகழாகுவர்தாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிதிருநாமம்-வேதாரணியேசுரர்; வேதநாயகர்.

தேவிதிருநாமம்-யாழைப்பழித்தமொழியம்மை.

ஸமகிருதநாமம்-வீணாவாதவிதூஷணி.

அகத்தியான்பள்ளி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வாடியவெண்டலைமாலைசூடிமயங்கிரு
ணீடியாகொள்ளிவிளக்குமாகநிவந்தெரி
யாடியவெம்பெருமானகத்தியான்பள்ளியைப்
பாடியசிந்தையினார்கட்கில்லையாம்பாவமே. (௧)

துன்னங்கொண்டவுடையான்றுதைந்தவெண்ணீற்றினன்
மன்னுங்கொன்றைமதமத்தஞ்சூடினன்மாநக
ரன்னந்தங்குபொழில்சூழகத்தியான்பள்ளியை
யுன்னஞ்செய்தமனத்தார்கடம்வினையோடுமே. (௨)

உடுத்ததுவும்புலித்தோல்பலிதிரிந்துண்பதுங்
கடுத்துவந்தகழற்காலன்றனையங்காலினா
லடர்த்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
றொடுத்ததுவுஞ்சரமுப்புரந்துகளாகவே. (௩)

காய்ந்ததுவுமன்றுகாமனைநெற்றிக்கண்ணினால்
பாய்ந்ததுவுங்கழற்காலனைப்பண்ணினான்மறை
யாய்ந்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியா
னேய்ந்ததுவுமிமவான்மகளொருபாகமே. (௪)

போர்த்ததுவுங்கரியின்னுரிபுலித்தோலுடை
கூர்த்ததோர்வெண்மழுவேந்திகோளரவம்மரைக்
கார்த்ததுவும்பொழில்சூழகததியான்பள்ளியான
பார்த்ததுவும்மரணம்படரெரிமூழ்கவே. (௫)

தெரிந்ததுவுங்கணையொன்றுமுப்புரஞ்சென்றுட
னெரிந்ததுவுமுனனெழிலார்மலருறைவானறலை
யரிந்ததுவும்பொழில்சூழகத்தியானபள்ளியான்
புரிந்ததுவுமுமையாளோர்பாகம்புனைதலே. (௬)

ஓதியெல்லாமுலகுக்கொரொண்பொருளாகிமெய்ச்
சோதியென்றுதொழுவாரவர்துயர்தீர்த்திடு
மாதியெங்கள்பெருமானகததியான்பள்ளியை
நீதியாற்றொழுவாரவர்வினைநீங்குமே. (௭)

செறுத்ததுவுந்தக்கன்வேள்வியைத்திருந்தார்புர
மொறுத்ததுவுமொளிமாமலருறைவானசிர
மறுத்ததுவும்பொழில்சூழகததியான்பள்ளியா
னிறுத்ததுவுமரக்கனறனதோள்களிருபதே. (௮)

சிரமுநல்லமதிமத்தமுநதிகழ்கொன்றையு
மரவமல்குஞ்சடையானகததியான்பள்ளியைப்
பிரமனோடுதிருமாலுநதேடியபெற்றிமை
பரவவல்லாரவர்தங்கண்மேல்வினைபாறுமே. (௯)

செந்துவராடையினாரும்வெற்றரையேதிரி
புந்தியிலார்களுமபேசும்பேச்சவைபொய்ம்மொழி
யந்தணனெங்கள்பிரானகத்தியானபள்ளியைச்
சிந்தியினும்வினையானவைசிதைநதோடுமே. (௧௦)

ஞாலமல்குந்தமிழ்ஞானசம்பந்தன்மாமயி
லாலுஞ்சோலைபுடைசூழகத்தியான்பள்ளியுட்
சூலநல்லபடையானடிதொழுதேத்திய
மாலைவல்லாரவர்தங்கண்மேல்வினைமாயுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிதிருநாமம்-அகத்தீசுவரர்.

தேவிதிருநாமம்-பாகம்பிரியாளம்மை,

ஸம்ஸ்கிருதநாமம்-வாமபாகேசுவரி.

திருக்கோடிக்குழகர்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கடிதாய்க்கடற்காற்றுவந்தெற்றக்கரைமேற்
குடிதானயலேயிருந்தாற்குற்றமாமோ
கொடியேன்கண்கள்கண்டனகோடிக்குழகீ
யடிகேளுமக்கார்துணையாகவிருந்தீரே. (௧)

முன்றான்கடனஞ்சமுண்டவதனாலோ
பின்றான்பரவைக்குபகாரஞ்செய்தாயோ
குன்றாப்பொழில்சூழ்தருகோடிக்குழகா
வென்றான்றனியேயிருந்தாயெம்பிரானே. (௨)

மத்தம்மலிசூழ்மறைக்காடதன்றென்பாற்
பத்தர்பலர்பாடவிருந்தபரமா
கொத்தார்பொழில்சூழ்தருகோடிக்குழகா
வெத்தாற்றனியேயிருந்தாயெம்பிரானே. (௩)

காடேன்மிகவாலிதுகாரிகையஞ்சக்
கூடிப்பொந்திலாந்தைகள்கூகைகுழற
வேடித்தொண்டர்சாலவுந்தீயர்சழக்கர்
கோடிக்குழகாவிடங்கோயில்கொண்டாயே. (௪)

மையார்தடங்கண்ணிபங்காகங்கையாளு
மெய்யாகத்திருந்தனள்வேறிடமில்லை
கையார்வளைக்காடுகாளோடுமுடனாய்க்
கொய்யார்பொழிற்கோடியேகோயில்கொண்டாயே. (௫)

அரவேரல்குலாளையொர்பாகமமர்ந்து
மரவங்கமழ்மாமறைக்காடதன்றென்பாற்
குரவம்பொழில்சூழ்தருகோடிக்குழகா
விரவேதுணையாயிருந்தாயெம்பிரானே. (௬)

பறையுங்குழலும்மொலிபாடலியம்ப
வறையுங்கழலார்க்கநின்றாடுமமுதே
குறையாப்பொழில்சூழ்தருகோடிக்குழகா
விறைவாதனியேயிருந்தாயெம்பிரானே.

ஒற்றியூரென்றவூனத்தினாலதுதானோ
அற்றப்பட்டாரூரதென்றகன்றாயோ
முற்றுமதிசூடியகோடிக்குழகா
வெற்றூறனியேயிருந்தாயெம்பிரானே. (அ)

நெடியானொடுநான்முகனும்மறிவொண்ணாப்
படியானபலிகொள்ளுமிடங்குடியிலலை
கொடியாரபலவேடர்கள்வாழுங்கரைமே
லடிகேளனபதாயிடங்கோயிலகொண்டாயே. (௯)

பாரூர்மலிசூழ்மறைக்காடதனறென்பா
லேரார்பொழில்சூழ்தருகோடிகுழகை
யாரூரனுரைத்தனபத்திவைவல்லார்
சீரூர்சிவலோகத்திருப்பவர்தாமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிதிருநாமம்-அமிர்தகடேசர், குழகேசர்.

தேவிதிருநாமம்-மையார்தடங்கண்ணியம்மை.

* ஸ்தலவிருக்ஷம்-அஞ்சனாக்ஷி.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
20.